*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*12 09 2025    FRIDAY    7.15 PM*

*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. நாட்டின் பாரம்பரிய ஓலைச்சுவடிகளை மின்னணு கட்டமைப்பில் பாதுகாக்கும் Gyan பாரதம் இணையதளத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

2. விளையாட்டை மக்கள் இயக்கமாக மாற்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

3. தேர்தலின் போது, தவறான தகவல்கள் பரப்பப்படுவதை தடுக்க ஊடகங்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

4. உலகளாவிய கடல்சார் நிர்வாகத்தை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக கடலோர காவல்படையின் தலைமை இயக்குநர் திரு. Paramesh Sivamani தெரிவித்துள்ளார்.

5. வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Ashmita Chaliha அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் பாரம்பரிய ஓலைச்சுவடிகளை மின்னணு கட்டமைப்பில் பாதுகாக்கும் Gyan பாரதம் இணையதளத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும், அறிவுசார் இந்தியா சர்வதேச கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் நம்பிக்கையை பறைசாற்றும் தளமாக அறிவுசார் இந்தியா இயக்கம் திகழ்வதாக குறிப்பிட்டார்.

>>>>><<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, மிசோரம், மணிப்பூர், அஸ்ஸாம், மேற்குவங்கம், பீகார் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு நாளை தமது மூன்று நாள் பயணத்தை தொடங்குகிறார்.

தமது பயணத்தின்போது மொத்தம் 71 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வைக்கிறார்.

முதற்கட்டமாக, நாளை மிசோரம் செல்லும் பிரதமர், *Aizawal*-ல் ஒன்பதாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளை தொடங்கிவைத்து பொதுமக்களிடையே உரையாற்றவுள்ளார்.

பின்னர் மணிப்பூர் செல்லும் பிரதமர், *Churachandpur*-ல் ஏழாயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

நாளை மறுநாள் பிரதமர் திரு நரேந்திர மோடி அஸ்ஸாம் செல்ல திட்டமிட்டுள்ளார்.

>>>>><<<<<

நாட்டில் உள்ள ஒவ்வொரு வீதியும் விளையாட்டு அரங்கமாக உருவெடுத்து வருவதாக மத்திய இளையோர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தனியார் ஊடகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விளையாட்டு மாநாட்டில் உரையாற்றிய அவர், ஒவ்வொரு விளையாட்டு மேடையிலும் தேசியக் கொடி பறக்க வேண்டும் என்று கூறினார்.

விளையாட்டை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற உணர்வு அனைத்து தரப்பு மக்களிடமும் வளர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

விளையாட்டு கலாச்சாரம், நம் ஒவ்வொருவரிடமும் வேரூன்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விளையாட்டில் சிறந்து விளங்கும் முதல் ஐந்து நாடுகள் பட்டியலில் இந்தியா வர வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் விளையாட்டுகளின்

வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என்றும் டாக்டர் மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

நார்வே-வுடன் கடல் சார் பாதுகாப்பு, ஆயுத குறைப்பு குறித்து ஆஸ்லோ நகரில் நடைபெற்ற பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், அணு ஆயுதப் பரவலை தடுக்கவும், ஆயுத குறைப்பு மேற்கொள்ளவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக, உலக நாடுகளின் ஒத்துழைப்பு கோருவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு பாதுகாப்பான கடல் சூழலை பராமரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பொருளாதார வளர்ச்சி, அமைதி, உள்ளிட்டவை குறித்தும், இந்தியா – நார்வே இடையேயான கூட்டு முயற்சிகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கடல்பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுப்பது குறித்தும், பாதுகாப்பான கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் இருதரப்பிலும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகவும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா – நார்வே இடையிலான அடுத்தக்கட்ட பேச்சுக்கள் புதுதில்லியில் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மொரிஷியஸ் பிரதமர் திரு நவீன் சந்திர ராம் கூலம் அயோத்தியில் உள்ள ஸ்ரீ ராம் லல்லா கோவிலில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் கலந்துகொண்டார்.

அயோத்தியில் அவருக்கு பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மாநில அமைச்சர் திரு சூரிய பிரதாப் ஷாகி ஆகியோர் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

அயோத்தி ராமர் கோவிலில் 45 நிமிடங்கள் தங்கியிருந்த பின்னர், மொரிஷியஸ் பிரதமர் டேராடூன் புறப்பட்டார்.

>>>>><<<<<

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களில், நடப்பாண்டு *OPIUM* தயாரிக்க பயன்படும் கசகசா சாகுபடிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள மத்திய நிதியமைச்சகத்தின் உத்தரவில், அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல், அடுத்த ஆண்டு செப்டம்பர் 30-ஆம் தேதிவரை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

கசகசா சாகுபடிக்கான நிலப்பரப்பு உள்ளிட்ட நிபந்தனைகளும் அந்த உத்தரவில் இடம்பெற்றுள்ளது.

இதனால், ஒரு லட்சத்து 21 ஆயிரம் விவசாயிகள், புதிதாக கசகசா சாகுபடிக்கான உரிமம் பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தேர்தலின் போது, உண்மையான தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று ஊடகத் துறையினரை தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஊடகத் துறையினர் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளின் தகவல் தொடர்பு அலுவலர்களுக்கான ஒருநாள் பயிலரங்கில், மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் செய்திகள் வெளியிடப்படுவதை முற்றிலும் தடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

*அரசியல் சாசன விதிகளின் படியே, ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடத்தப்படுவதால், தவறான தகவல்களால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்க ஒத்துழைப்பு தர வேண்டும் என்று தேர்தல் ஆணையம், ஊடகத்துறையினரை கேட்டுக் கொண்டது.*

*நாடுமுழுவதும் மேற்கொள்ளப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் தொடர்பாகவும் இந்தப் பயிலரங்கில் விவாதிக்கப்பட்டது.*

*>>>>><<<<<*

*உலகளாவிய கடல்சார் நிர்வாகத்தை வலுப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு இந்திய கடலோர காவல்படை உறுதிபூண்டுள்ளதாக அதன் தலைமை இயக்குநர் திரு. Paramesh Sivamani தெரிவித்துள்ளார்.*

*ரோம் நகரில் நடைபெற்ற கடலோர காவல்படை மாநாட்டில் உரையாற்றிய அவர், தூய்மையான - பாதுகாப்பான கடல்பரப்பை உருவாக்கி, சுற்றுச்சூழலை உறுதி செய்ய வேண்டும் என்று கூறினார்.*

*உலகளாவிய கடல்சார் பாதுகாப்புக்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா மேற்கொண்டு வருவதாகவும் திரு. Paramesh Sivamani தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

*பிரதமரின் வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ், புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு, நாடுமுழுவதும் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெற்று வருகின்றனர்.*

*திருப்பத்தூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசின் நிதியுதவியுடன் புதிய தொழில்களை தொடங்கியுள்ளவர்கள், இதன் மூலம் தங்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதாக தெரிவித்தனர்.*

*(வாய்ஸ் பைட் – பயனாளிகள் 38 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

சத்தான உணவு, ஆரோக்கியமான இந்தியாவிற்கு அடித்தளமாக அமைந்துள்ளது என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

8-வது தேசிய ஊட்டச்சத்து விழிப்புணர்வு இயக்கத்தை இன்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், சர்க்கரை, உப்பு, எண்ணெய் ஆகியவற்றை உணவில் மிகக்குறைவாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், சமச்சீரான உணவு முறையை கடைபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

முறையான உடற்பயிற்சி, ஆரோக்கியத்திற்கு உகந்த வாழ்க்கை முறை போன்றவை, உடல் பருமன், நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் என்றும் திரு. கைலாஷ்நாதன் தெரிவித்தார்.

>>>>><<<<<

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Ashmita Chaliha* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-18, 14-21, 21-18 என்ற செட்கணக்கில் மலேசியாவின் *Wong Ling Ching*-ஐ வென்றார்.

>>>>><<<<<

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Minakshi* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் *Liverpool*-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், இங்கிலாந்தின் *Alice Pumphrey* -ஐ வென்றார்.

இதன்மூலம் இந்தியாவுக்கு மேலும் ஒரு பதக்கம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக சீனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Leena Dhapre* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-14, 18-21, 21-13 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Kazumi Kimura-வை வென்றார்.*

*இதர மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் Jessie Philip, Poonam Tatwawadi ஆகியோரும் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் Philip Bency Chirakkiparambil-ம், கலப்பு இரட்டையர் பிரிவில் Suzanne Venglet - Lingeswara Rao இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.*

*>>>>><<<<<*

*ஹாங்காங் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 17-21, 21-13 என்ற செட்கணக்கில் இந்தியாவின் Ayush Shetty-யை வென்றார்.*

*>>>>>END<<<<<*